JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness for Prosecution

CC. No. 34/2024 Crime No. 540/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW–2–ராமசாமி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தாளப்பையனூரில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அ.சா.1 பெருமாயி அம்மாளை எனக்கு தெரியும். அவர் எனது மனைவி ஆவார். எனது மகன் மயில்சாமிக்கும், கண்ணாடிபாளையத்தைச் சேர்ந்த தங்கராஜ் என்பவருக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது. மயில்சாமி அவரிடம் பெற்ற பணத்தை திருப்பி தந்து விட்டார். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலையில் நான் வேலைக்கு சென்று விட்டேன். அப்போது எனது மனைவி அ.சா.1 மட்டும் வீட்டில் இருந்தார். அப்போது எதிரிகள் இருவரும் எனது வீட்டிற்கு வந்ததாகவும் எதிரி சுந்தர்ராஜ் தன்னை CBI ஆபீஸர் என்று எனது மனைவியிடம் கூறியதாகவும், எதிரிகள் இருவரும் எனது மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி, மிரட்டியதாகவும், எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். புகார் அளித்ததற்கு மறுநாள் அங்கு எனது வீட்டிற்கு வந்த போலீசார் காலை சுமார் 08.00 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்தார்கள். அப்போது நானும் அருகில் இருந்தேன். சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நானும் என்னுடன் இருந்த அன்னபூரணி என்பவரும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது சாட்சி கையொப்பம் அன்னபூரணியினுடையது **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:52:55 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:53:00 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

CC. No. 34/2024 Crime No. 540/2023 Station Bhavani

| Name | PW–1–பெருமாயி அம்மாள் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தாளபையனூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் சம்பவத்தன்று என்னிடம் தகராறு செய்தவர்கள் ஆவர்கள். எனது மகன் மயில்சாமியும், கண்ணாடிபாளையத்தை சேர்ந்த தங்கராஜ் என்பவரும் ஒன்றாக வியாபாரம் செய்து வந்தார்கள். அவர்கள் இருவருக்குள்ளும் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது. மயில்சாமி, தங்கராஜிடமிருந்து பணம் வாங்கி இருந்தார். அதை கேட்பதற்காக தங்கராஜ் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது மயில்சாமி பணத்தை தந்து விடுவதாக கூறினார். இந்நிலையில் தேதி, மாதம் நினைவில்லை, கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு ஆஜர் எதிரிகள் இருவரும் தங்கராஜ் அனுப்பியதாக கூறி எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எனது மகன் எங்கே என்று என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் எனது மகன் வீட்டில் இல்லை என்றும், காலையில் வருமாறு அவர்களிடம் கூறினேன். பிறகு மறுநாள் காலையில் காலை சுமார் 07:00 மணிக்கு ஆஜர் எதிரிகள் இருவரும் எனது வீட்டிற்கு வந்தார்கள். வீட்டில் நான் மட்டும்தான் இருந்தேன். அப்போது எதிரிகள் இருவரும் போதையில் இருந்தார்கள். அதில் 2ம் எதிரி சுந்தர்ராஜ் என்னிடம் வந்து நான் சென்னையில் இருந்து CID போலீஸ் வந்துள்ளேன் என்று கூறினார். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி. எனது மகன் எங்கே என்றும். அவர் வரவில்லை என்றால். உன்னை கொன்று விடுவேன் என்று கூறி என்னை கையைப் பிடித்து இழுத்தார்கள். நான் அவர்களிடமிருந்து கையை இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றேன். அப்போது எதிரி ஆறுமுகம் எனது கையைப் பிடித்து இழுத்தார். அதில் நான் கீழே விழுந்து விட்டேன். அப்போது நான், எதிரிகளிடம் எனக்கு அவசரமாக சிறுநீர் வருகிறது என்றும், சிறுநீர் கழிக்க வேண்டும் என்றும் கூறினேன்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.10 18:53:12 +0530

அப்போது எதிரி ஆறுமுகம் எனது கையைப் பிடித்துக் கொண்டே வந்தார். அவர் கையைப் பிடித்துக் கொண்ட நிலையிலேயே நான் சிறுநீர் கழித்தேன். பிறகு நான் அரிசி புடைப்பதற்காக முறத்தை எடுத்தேன். அப்போது எதிரி சுந்தர்ராஜன் அரிசி முறத்தை எட்டி உதைத்தார். அதில் அரிசிகள் கீழே கொட்டி விட்டது. நான் பயந்துகொண்டு அருகிலுள்ள சின்னையன் என்பவர் வீட்டிற்கு சென்றேன். அப்போது அங்கு வந்த எதிரிகள் இருவரும் எனது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மீண்டும் எனது வீட்டிற்கு என்னை இழுத்து வந்து விட்டார்கள். பின்னர் எனது வீட்டின் கதவை பூட்டி விட்டார்கள். எதிரிகள் இருவரும் எனது வீட்டின் முன்பே நின்று கொண்டு இருந்தார்கள். நான் பின்னர் அங்கிருந்து வந்து பஸ் பிடித்து எனது மகன்களின் வீட்டிற்கு வந்து, அங்கிருந்து காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள கைரேகை நான் வைத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.10 18:53:17 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.